பிரசார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**04 05 2026** **MONDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** தமிழக சட்டப்பேரவை தேர்தலில் எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காத சூழல் உருவாகியுள்ளது. த.வெ.க தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது. ஆளும் திமுக பெரும் பின்னடைவை சந்தித்துள்ளது. முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் மற்றும் மாநில அமைச்சர்கள் பலர் பின்தங்கியுள்ளனர்.

**2.** மேற்குவங்கத்தில் ஆட்சியை கைப்பற்றியுள்ள பிஜேபி, அஸ்ஸாமில் ஆட்சியை தக்க வைத்துள்ளது.

**3.** புதுச்சேரியிலும் தேசிய ஜனநாயக கூட்டணி பெரும்பான்மை இடங்களை கைப்பற்றியுள்ளது.

**4.** கேரளாவில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி ஆட்சியை கைப்பற்றியுள்ளது.

**5.** **17** வயதுக்குபட்டோருக்கான ஆசிய குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் **Rakhi, Ovi** மற்றும் மம்தா இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

**...** இனி விரிவான செய்திகள் **...**

<<<<<>>>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காத சூழல் உருவாகியுள்ளது.

முன்னணி நிலவரங்கள் 234 தொகுதிகளில், 105 தொகுதிகளில் முன்னிலை பெற்று, தனிப்பெரும் கட்சியாக த.வெ.க. உருவெடுத்துள்ளது.

அக்கட்சியின் தலைவர் திரு. விஜய், தாம் போட்டியிட்ட பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு தொகுதியில் முன்னிலை வகிக்கிறார்.

இந்த தேர்தலில், ஆளும் திமுக பெரும் பின்னடைவை சந்தித்துள்ளது.

முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், மாநில அமைச்சர்கள் திரு. துரைமுருகன், திரு. கே.என். நேரு, திரு. டி.ஆர்.பி. ராஜா, திரு. தங்கம் தென்னரசு, திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன் திரு. மா. சுப்பிரமணியன், திரு. நாசர், திரு. முத்துசாமி, திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, திரு. தாமோ. அன்பரசன் உள்ளிட்டோர் பின்தங்கியுள்ளனர்.

அஇஅதிமுக 64 தொகுதிகளிலும், திமுக 44 தொகுதிகளிலும், காங்கிரஸ் 5 தொகுதியிலும், பாமக 4 தொகுதிகளிலும், பிஜேபி 3 தொகுதியிலும், தேமுதிமுக, வி.சி.க மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

தலா 2 தொகுதிகளிலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், அமமுக தலா ஒரு தொகுதியிலும் முன்னிலை வகிக்கின்றன.

த.வெ.க. தலைவர் திரு. விஜய் பெரம்பூர் தொகுதியில் **8** ஆயிரத்து **140** வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை வகிக்கிறார்.

திருச்சி கிழக்கு தொகுதியிலும் அவர், **5** ஆயிரத்து **286** வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றுள்ளார்.

கொளத்தூர் தொகுதியில் த.வெ.க வேட்பாளர் திரு. வி.எஸ். பாபு, முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலினை விட **7** ஆயிரத்து **300** வாக்குகள் கூடுதலாக பெற்று முன்னிலை வகிக்கிறார்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி, எடப்பாடி தொகுதியில் **13** ஆயிரத்து **142** வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றுள்ளார்.

தருமபுரி தொகுதியில் பாமக சார்பில் போட்டியிட்ட திருமதி. சௌமியா அன்புமணி **8**ஆயிரத்து **245** வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை வகிக்கிறார்.

திமுக பொதுச்செயலாளர் திரு. துரைமுருகன், காட்பாடி தொகுதியில் பின்தங்கியுள்ளார். அந்த தொகுதியில் அஇஅதிமுக வேட்பாளர் திரு. ராமு **3** ஆயிரத்து **965** வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றுள்ளார்.

த.வெ.க முன்னிலை பெற்றுள்ள தொகுதிகளின் விவரங்கள் -

கும்மிடிப்பூண்டி, பொன்னேரி, திருவள்ளூர், பூந்தமல்லி, ஆவடி, மதுரவாயல், அம்பத்தூர், மாதவரம், திருவொற்றியூர், ஆர்,கே. நகர், பெரம்பூர், கொளத்தூர், வில்லிவாக்கம், திரு.வி.க. நகர், எழும்பூர், ராயபுரம், ஆயிரம் விளக்கு, அண்ணாநகர், விருகம்பாக்கம், சைதாப்பேட்டை, தி.நகர், மயிலாப்பூர், வேளச்சேரி, சோழிங்கநல்லூர், ஆலந்தூர், ஸ்ரீபெரும்புதூர், பல்லாவரம், தாம்பரம், செங்கல்பட்டு, திருப்போரூர், உத்திரமேரூர், அரக்கோணம், சோளிங்கர், கே.வி. குப்பம், குடியாத்தம், ஆம்பூர், திருப்பத்தூர், ஊத்தங்கரை, பர்கூர், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, போளூர், விக்கிரவாண்டி,

கள்ளக்குறிச்சி, சங்ககிரி, சேலம் மேற்கு, சேலம் வடக்கு, சேலம் தெற்கு, ராசிபுரம், திருச்செங்கோடு, குமாரப்பாளையம், ஈரோடு கிழக்கு, ஈரோடு மேற்கு, மொடக்குறிச்சி, கோபிசெட்டிப்பாளையம், அவினாசி, திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, பல்லடம், சூலூர், கவுண்டம்பாளையம்,

கோவை வடக்கு, சிங்காநல்லூர், கிணத்துக்கடவு, திண்டுக்கல், அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம், குளித்தலை, மணப்பாறை, ஸ்ரீரங்கம், திருச்சி கிழக்கு, முசிறி, துறையூர், பெரம்பலூர், கீழ்வேளூர், தஞ்சாவூர், கந்தர்வகோட்டை, புதுக்கோட்டை, அறந்தாங்கி, காரைக்குடி, சிவகங்கை, மானாமதுரை, மதுரை கிழக்கு, சோழவந்தான், மதுரை வடக்கு, மதுரை தெற்கு, மதுரை மத்தி, மதுரை மேற்கு, திருப்பரங்குன்றம், உசிலம்பட்டி, பெரியகுளம், கம்பம், ராஜபாளையம், சாத்தூர், அருப்புக்கோட்டை, திருச்சுழி, பரமக்குடி, தூத்துக்குடி, திருச்செந்தூர், ஒட்டப்பிடாரம், திருநெல்வேலி, பாளையங்கோட்டை, நாங்குநேரி, ராதாபுரம், மற்றும் கிள்ளியூர்.

அஇஅதிமுக முன்னிலை பெற்றுள்ள தொகுதிகளின் விவரங்கள் -

திருத்தணி, செய்யூர், மதுராந்தகம், காஞ்சிபுரம், காட்பாடி, ஆற்காடு, அணைக்கட்டு, ஜோலார்பேட்டை, வேப்பனஹள்ளி, ஒசூர், பாலக்கோடு, பாப்பிரெட்டிபட்டி, கலசப்பாக்கம், அரூர், செங்கம், கீழ்பெண்ணாத்தூர், கலசப்பாக்கம், ஆரணி, செய்யாறு, வந்தவாசி, மயிலம், திண்டிவனம், வானூர், திருக்கோவிலூர், உளுந்தூர்பேட்டை, கங்கவல்லி, ஆத்தூர், ஏற்காடு, ஓமலூர், மேட்டூர், எடப்பாடி, சங்ககிரி, வீரபாண்டி, சேந்தமங்கலம், நாமக்கல், தாராபுரம், காங்கேயம்,

பெருந்துறை, பவானி, அந்தியூர், பவானிசாகர், தொண்டாமுத்தூர், பொள்ளாச்சி, பழநி, நத்தம், கரூர், லால்குடி, அரியலூர், நெய்வேலி, குறிஞ்சிப்பாடி, புவனகிரி, சிதம்பரம், பூம்புகார், வேதாரண்யம், நன்னிலம், பாபநாசம், பேராவூரணி, விராலிமலை, மேலூர், ஆண்டிப்பட்டி, சிவகாசி, ஸ்ரீவைகுண்டம், சங்கரன்கோவில், கடையநல்லூர், ஆலங்குளம் மற்றும் அம்பாசமுத்திரம்.

<u>திமுக முன்னிலை பெற்றுள்ள தொகுதிகளின் விவரங்கள் -</u>

துறைமுகம், சேப்பாக்கம் திருவல்லிக்கேணி, ராணிப்பேட்டை, வேலூர், விழுப்புரம், ரிஷிவந்தியம், சங்காராபுரம், பரமத்தி வேலூர், கூடலூர், குன்னூர், மேட்டுப்பாளையம், கோவை தெற்கு, வால்பாறை, உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம், ஒட்டன்சந்திரம், ஆத்தூர், நிலக்கோட்டை, வேடச்சந்தூர், திருச்சி மேற்கு, திருவெறும்பூர், மண்ணச்சநல்லூர், குன்னம், திட்டக்குடி, சீர்காழி, நாகப்பட்டிணம், திருவாரூர், திருவிடைமருதூர், கும்பகோணம், திருவையாறு, ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, திருமயம், ஆலங்குடி திருப்பத்தூர், திருமங்கலம், போடி, ராமநாதபுரம், முதுகுளத்தூர், விளாத்திக்குளம், கோவில்பட்டி, வாசுதேவநல்லூர், தென்காசி மற்றும் கன்னியாகுமரி.

விக்கிரவாண்டி, பெண்ணாகரம், தருமபுரி, செஞ்சி, ஜெயங்கொண்டம் தொகுதிகளில் பாமக முன்னிலை பெற்றுள்ளது.

தளி, நாகர்கோவில், உதகமண்டலத்தில் பிஜேபி முன்னிலை வகிக்கிறது.

காங்கிரஸ் கடலூர், மயிலாடுதுறை, குளச்சல், திருவாடானை, விளவங்கோடு தொகுதிகளிலும் முன்னிலை வகிக்கிறது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி திருத்துறைப்பூண்டி, ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதிகளிலும், மார்ச்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பத்மநாபபுரம் தொகுதியிலும் வி.சி.க. காட்டுமன்னார் கோவில் தொகுதியிலும், தேமுதிக விருதுநகர் தொகுதியிலும், புதிய தமிழகம் ஒட்டப்பிடாரம் தொகுதியிலும் முன்னிலை பெற்றுள்ளன.

<<<<<>>>>>>

ஐந்து மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் மேற்குவங்கம், அஸ்ஸாம் மாநிலத்தில் பிஜேபி-யும், கேரளத்தில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணியும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் என் ஆர் காங்கிரஸ் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியும் முன்னிலை வகிக்கின்றன.

மேற்குவங்க மாநிலத்தில் 293 தொகுதிகளில் முன்னிலை நிலவரம் தெரிய வந்த 252 தொகுதிகளில் பிஜேபி 171 தொகுதிகளிலும், திரிணமுல் காங்கிரஸ் 83 தொகுதிகளிலும் முன்னிலை பெற்றுள்ளன.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு தொகுதியிலும், **BGPM, AJUP** தலா ஒரு தொகுதியிலும் முன்னிலை வகிக்கின்றன.

இம்மாநிலத்தின் ஒரு தொகுதியில் மட்டும் மறு வாக்குப்பதிவு நடைபெறவுள்ளதால், அங்கு வாக்கு எண்ணிக்கை நடைபெறவில்லை.

மாநில தலைநகர் கொல்கத்தாவில் **11** சட்டப்பேரவைத் தொகுதிகளில் பதிவான வாக்குகள் ஐந்து மையங்களில் எண்ணப்பட்டு வருகின்றன.

மேற்குவங்கத்தில் இரண்டு கட்டங்களாக நடைபெற்ற தேர்தலில் **92** புள்ளி நான்கு ஏழு சதவீத வாக்குகள் பதிவாயின.

முதலமைச்சரும், திரிணமுல் காங்கிரஸ் தலைவருமான செல்வி மம்தா பானர்ஜி, சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் திரு சுவேந்து அதிகாரி ஆகியோர் பவானிப்பூர் தொகுதியில் களத்தில் உள்ளனர்.

மாநில அமைச்சர்கள் திரு **Sujit Bose — Bidhan Nagar** தொகுதியிலும், திரு **Firhad Hakim -** கொல்கத்தா துறைமுகம் தொகுதியிலும், ஜோதி பிரிய மல்லிக் **- Habra** தொகுதியிலும் களத்தில் உள்ளனர்.

பிஜேபி சார்பில் முக்கிய மத்திய அமைச்சர் திரு **Nisith Pramanik — Matha Bhanga** தொகுதியிலும், திரு சங்கர் கோஷ் —

சிலிகுரி தொகுதியிலும், முன்னாள் மக்களவை உறுப்பினர் திரு திலிப் கோஷ் - **Kharagpur** தொகுதியிலும் களத்தில் உள்ளனர்.

காங்கிரஸ் மூத்த தலைவர் திரு அதிர் ரஞ்சன் சௌத்ரி — **Baharampur** தொகுதியிலும், மாநில காங்கிரஸ் தலைவர் திரு சுபாங்கர் சர்கார் - சீராம்பூர் தொகுதியிலும் களத்தில் உள்ளனர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் செல்வி மீனாட்சி முகர்ஜி - உத்தர்பாரா தொகுதியிலும், செல்வி தீப்ஷிதா - **Dum Dum** தொகுதியிலும், கொல்கத்தா முன்னாள் மேயர் திரு பிகாஷ் ரஞ்சன் பட்டாச்சார்யா - ஜாதவ்பூர் தொகுதியிலும் களத்தில் உள்ள முக்கியமான வேட்பாளர்கள் ஆவர்.

<<<<<>>>>>

புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு வருகின்றன.

**30** தொகுதிகளில் பதிவான வாக்குகள் ஆறு மையங்களில் எண்ணப்பட்டு வருகின்றன.

முன்னிலை நிலவரம் தெரியவந்த **16** தொகுதிகளில் என் ஆர் காங்கிரஸ் **9** தொகுதிகளிலும், அதன் கூட்டணி கட்சியான பிஜேபி

இரண்டு தொகுதிகளிலும், அஇஅதிமுக ஒரு தொகுதியிலும் முன்னிலை வகிக்கின்றன.

காங்கிரஸ், திமுக தலா ஒரு தொகுதியிலும், சுயேட்சைகள் மூன்று தொகுதிகளிலும் முன்னிலையில் உள்ளன.

முதலமைச்சரும், என் ஆர் காங்கிரஸ் தலைவருமான திரு ரங்கசாமி, பிரதேச காங்கிரஸ் தலைவர் வைத்திலிங்கம், பிஜேபி தலைவர் திரு வி பி ராமலிங்கம், பிஜேபி மூத்த தலைவர் திரு நமச்சிவாயம் ஆகியோர் முக்கிய வேட்பாளர்கள் ஆவர்.

<<<<<>>>>>>

கேரளம் சட்டப்பேரவைத் தேர்தலில் எதிர்க்கட்சியான காங்கிரஸ் பத்தாண்டுகளுக்கு பிறகு ஆட்சியை கைப்பற்றுகிறது.

மொத்தம் உள்ள 140 தொகுதிகளில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு வருகின்றன.

முன்னணி நிலவரம் தெரியவந்த 140 தொகுதிகளில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி 89 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது.

இந்த கூட்டணியில் காங்கிரஸ் **56** தொகுதிகளிலும், அதன் கூட்டணி கட்சியான இந்திய யூனியன் முஸ்லீம் லீக் **22** தொகுதிகளிலும், கேரளம் காங்கிரஸ் ஏழு தொகுதிகளிலும், ஆர்எஸ்பி மூன்று தொகுதிகளிலும், ராஷ்ட்ரிய ஜனதாதள் ஒரு தொகுதியிலும் முன்னிலை வகிக்கின்றன.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான இடது ஜனநாயக முன்னணியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி **29** தொகுதிகளிலும், அதன் கூட்டணி கட்சியான இந்திய கம்யூனிஸ்ட் **12** தொகுதிகளிலும் முன்னிலை வகிக்கின்றன.

பிஜேபி இரண்டு தொகுதிகளிலும், புரட்சிகர மார்க்சிஸ்ட் கட்சி, கேரளம் காங்கிரஸ் ஜே தலா ஒரு தொகுதியிலும் முன்னிலை பெற்றுள்ளன.

சுயேட்சைகள் நான்கு தொகுதிகளில் முன்னிலை பெற்றுள்ளன.

<<<<<>>>>>>

சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற்ற அஸ்ஸாம் மாநிலத்தில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி முன்னிலை பெற்றுள்ளது.

மொத்தம் உள்ள **126** தொகுதிகளில் பிஜேபி **78** தொகுதிகளிலும், அதன் கூட்டணி கட்சியான அஸ்ஸாம் கனபரிஷத் **9** தொகுதிகளிலும் முன்னிலை வகிக்கின்றன.

காங்கிரஸ் **24** தொகுதிகளில் முன்னிலை பெற்றுள்ளது.

போடோலாந்து மக்கள் முன்னணி **10** தொகுதிகளிலும், அகில இந்திய ஐக்கிய ஜனநாயக முன்னணி இரண்டு தொகுதிகளிலும், ரஜோர்தால் கட்சி இரண்டு தொகுதிகளிலும், **UPPL** ஒரு தொகுதியிலும் முன்னிலை வகிக்கின்றன.

இம்மாநிலத்தில் கடந்த ஏப்ரல் **26-**ஆம் தேதி **126** தொகுதிகளில் ஒரே கட்டமாக நடைபெற்ற தேர்தலில் **85** புள்ளி ஒன்பது ஆறு சதவீத வாக்குகள் பதிவாயின.

முதலமைச்சரும், பிஜேபி மூத்த தலைவருமான திரு ஹிமந்த பிஸ்வா சர்மா தொடர்ந்து முன்னிலையில் உள்ளார்.

<<<<<>>>>>>

சட்டப்பேரவைத் தேர்தலோடு கர்நாடகாவின் **Bagalkot, Davanagere** தெற்கு, நாகாலாந்தின் **Koridang,** திரிபுராவின் **Dharmanagar,** குஜராத்தின் **Umreth,** மற்றும் மஹாராஷ்ட்ராவின்

Rahuri, Baramati ஆகிய ஏழு சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடைபெற்றது.

இதில், பிஜேபி நான்கு தொகுதிகளிலும், காங்கிரஸ் 2 தொகுதிகளிலும், தேசியவாத காங்கிரஸ் ஒரு தொகுதியிலும் முன்னிலையில் உள்ளன.

<<<<<>>>>>>

விளையாட்டுச் செய்திகள்

17 வயதுக்குபட்டோருக்கான ஆசிய குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் Rakhi, Ovi மற்றும் மம்தா இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

உஸ்பெகிஸ்தானின், தாஷ்கண்டில் நடைபெற்று வரும் இப்போட்டியின் முதல் சுற்று ஆட்டங்களில் இவர்கள் வெற்றிபெற்றனர்.

---------------

Tepesigeman செஸ் போட்டியின் இந்தியாவின் அர்ஜூன் எரிகைஸி 3வது சுற்றில் வெற்றிபெற்று, கூடுதல் புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறார்.

---------------

லண்டனில் நடைபெற்று உலக டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் மகளிர் பிரிவில் இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

**<<<<<END>>>>>>**